# செய்திமடல் - 3

டாக்டர். C. அசோக்குமார்
Mob. No: 977976 – 9345261
E-mail: camsnepal77@gmail.com

Jeetpursimara -7 , Jeetpur,
Bara, Nepal

25.03.2024

கிறிஸ்துவிற்குள் பிரியமானவர்களே!

நல்ல தேவனின் நல்ல வழிகளில் நன்மைகளும், கிருபைகளும் பெற்று களி கூர்ந்து வாழ்ந்திட உங்களை, மகிமையின் தேவனுடைய திட்டங்களை நிறைவேற்றி முடிக்க பூவுலகில் மனிதனாக அவதரித்த தேவக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

எனது முந்தைய செய்தி மடல்களை தொடர்ந்து, தேவன் எங்களுக்கு வெளிப் படுத்தி செய்து முடிக்க கட்டளையிட்ட பணிகளில், நாங்கள் செய்து முடித்தவை களையும், தொடர்ந்து கொண்டிருக்கிற மகிமையானப் பணிகளையும், குறித்து நீங்களும் அறிந்து கொள்ளவும், அதனடிப்படையில் அவர் நாமத்தை உயர்த்தவும், இந்த மடலின் மூலம் உங்களுக்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். இந்த மகத்துவ மான பணிகளில் என்னுடன் இணைந்து தீவிரப்படும் 10 சகோதரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரையும் உங்கள் ஜெபங்களில் தொடர்ந்து தாங்கி வருகிறதற்காக உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

தேவன் எங்கள் மூலமாக நிறைவேற்றி முடிக்க தீர்மானித்துள்ள பணிகள் அவ்வளவு எளிதானதல்ல. தாவீது இராஜாவாக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு அபிஷேகிக்கப்பட்ட பின் நேரடியாக அரண்மனையில் சிங்காசனத்திற்கு அல்ல, யுத்த களத்திற்கு செல்ல வேண்டிய சூழ்நிலை நேரிட்டது. உடன் சகோதரரின் கோபத்திற்கும், வசை சொற்களுக்கும் ஆளாக வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. தகப்பனின் உத்தரவிற்கு கீழ்படிந்து சென்ற போது, தமையர்களின் நிந்தனைப் பேச்சுக்களை எதிர் கொள்ள வேண்டிய கடினமான சூழ்நிலையும் ஏற்பட்டது. யுத்த களத்தில் இருந்த போதும் கூட தனது ஆஸ்திகளின் மீது (ஆட்டு மந்தை) கண்ணோக்கமாயிருந்த மூத்த சகோதரன், “நீ துணிகரமானவன்! இருதயத்தில் அகங்காரம் கொண்டவன்” என வசை மொழி பொழிந்ததையும் எதிர் பேசாமல் கேட்க வேண்டியதிருந்தது. ஆனால் இவைகள் தாவீதை தடை செய்ய முடியவில்லை. காரணம் தெரிந்தெடுத்து அழைத்து அபிஷேகித்தவர் தேவனல்லவா? இவற்றை கடந்து வந்த தாவீதை இராஜாவும் தலை வனுமாகிய சவுலின் உற்சாகமிழக்க வைக்கும் (Discourage) வார்த்தைகளும் தடுத்து நிறுத்திட முடியவில்லை. “கர்த்தர் என் பட்சத்தில் இருப்பது தான் எனது பெலன்” என்று அதனை எளிதாக மேற்கொண்டு விட்டான். கடைசியாக பலவானாகிய இராட்சதனை எதிர் கொள்ளும் நிலை ஏற்பட்டது. அவ்விடத்திலும் தன்னை ஏளனம் செய்து, சபித்த கோலியாத்தை எளிமையான கூழாங்கல்லால் முறியடித்து “யுத்தம் கர்த்தருடையது,

அவரே இரட்சிக்கிறவர், எதிரிகளை ஒப்பு கொடுக்கிறவர்" என்பதை உலகிற்கு உணர்த்தினான். தன்னுடைய குணத்திற்கு (Character) அடுத்த காரியமானாலும், திறமைக்கு (Capacity) அடுத்த காரியமானாலும் நன்மதிப்பிற்கடுத்த (Charisma) காரியமானாலும், எல்லாவற்றிலும் தாவீது தடைகளை தாண்டினான் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

இந்த மாதத்தில் நயாபஸ்தி, குஜீரா, பக்னொர்வர், கோயில்வார், போங்ஜீர், கத்திபர்சா, பர்சாகாவ், ஜிங்னா, பாகாய் மற்றும் ஹர்தாஸ்பூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து அவர்களை வெளிச்சத்திற்கு அழைத்து வரவேண்டிய பெரிதான பணிகளை தேவன் முன்னிறுத்தியதால் "ஒளிரச்செய் - 10 (Torch – 10) (Target Outreach to Raise Care Houses) என்ற இலக்கை நிர்ணயித்து ஜெபத்துடன் அதற்கான ஆயத்த பணிகளை செய்துள்ளோம். புதிதாக 3 வீட்டு சபைகளை தொடங்க தேவன் ஒத்தாசையளித்தார். புதிதாக கிறிஸ்துவில் ஐக்கியம் கொண்டவர்களுக்காக ஹர்ப்பூர் என்ற இடத்தில் சிறப்பு குடும்ப மாலைக்கூடுகை நடத்தி அவர்களை கிறிஸ்துவின் ஐக்கியத்தில் பலப்படுத்த கர்த்தர் உதவி செய்தார்.



சுவிசேஷம் அறிவிக்கும் பணியை அதிவேகப்படுத்தி, அறுவடையை அதிகப் படுத்திட அர்ப்பணிப்புடன் எங்களுடன் சேர்ந்து கொண்ட 10 இளம் சீஷர்களுக்கு 21 நாட்கள் தொடர் சீஷத்துவ பயிற்சியளித்து அவர்களை தயார்படுத்திட கர்த்தர் மிகப்பெரிய கிருபையளித்தார். அவர்கள் 21 நாட்களும் நம்முடன் தங்கியிருந்து

வகுப்பறை பாடங்களை பயின்றது மட்டுமல்லாமல் களப்பணியிலும், செயல்முறை பயிற்சியும் பெற்றனர். ஒவ்வொரு நாளும் அதிகாலை தியானம் மற்றும் விண்ணப்ப ஜெபம் போன்றவைகளில் பரிசுத்தாவியானவரால் போதிக்கப்பட்டனர். சுவிசேஷத்தை அறிவிக்கவும், வேதவசனங்களை போதிக்கவும், பிரசங்கிக்கவும் பயிற்றுவிக்கப்பட்டனர். அவர்கள் குடும்பமாக பரமனின் சேனையில் இணைந்து தேவ இராஜ்ய கட்டுமான பணியில் தங்களை பரிபூரணமாக ஈடுபடுத்தவும், தேவன் மகிழ்வடையக்கூடிய பரிசுத்த வாழ்வு வாழவும், தினமும் கடந்து செல்லக்கூடிய பாதையில் எதிர் நோக்கக்கூடிய பாடுகளையும், தடைகற்களையும், வேதவசனத்தின் அடிப்படையில் துணிச்சலுடன் சந்திக்கவும் பயிற்றுவிக்கப்பட்டனர். வேதத்தின் அடிப்படையில் 25 விதமான பாடங்கள் பணித்தள தலைவர்கள் மற்றும் தேவனால் பயன்படுத்தப்படும் போதகர்களால் பயிற்று விக்கும் நிலையில் பயிற்சி திட்டம் உருவாக்கப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. நேபாள தேசத்திற்காக வெளிச்சமாக, உப்பாக நமது CAMS குழுவின் மூலம் செயல்படுகிறவர்களின் எண்ணிக்கை 20 குடும்பங்கள் ஆக உயர்ந்திருப்பது பெருமகிழ்ச்சியளிக்கிறது. பெரு மழையின் இரைச்சல் சமீபத்தில் கேட்கிறது.





டோடே பணித்தளத்தில் நமது முதல் CAMS ஆலய கட்டுமான பணிகளை தொடங்க ஆண்டவர் மகா பெரிய கிருபை செய்தார். இந்த பணித்தளம் மக்வான்பூர் மாவட்டத்தில் பாக்மதி மலையின் கடினமான பகுதியில் அமைந்துள்ளது. இதுவே இந்த பகுதியில் கட்டப்படும் முதல் தேவாலயம் ஆகும். இந்த பணிகளை விசுவாசிகளும், ஊழியரும் இணைந்து உற்சாகத்துடன் செய்து வருகிறார்கள். உங்களது ஊக்கமான ஜெபம் இந்த பணிகளை செய்து முடிக்கக்கூடிய புதிய பலத்தைத் தரும் என நம்புகிறோம்.

டோடே பணித்தள ஆலய கட்டுமானம்




இந்தியாவிலும் கர்த்தர் வெளிப்படுத்தின பாதைகளில் பயணம் செய்வதற்காக, தேசத்தின் சட்டவிதிகளுக்கு கீழ்படிந்து, நேபாளத்தில் பதிவு செய்யப்பட்ட நமது அமைப்பினை ஏப்ரல் மாதம் இந்தியாவிலும் பதிவு செய்து தொடர்ந்து தேவ கட்டளையை பீஹாரிலும், உத்திரபிரதேசத்திலும் நிறைவேற்ற பிரயாசப்படுகிறோம். “இயேசு கிறிஸ்துவில் ஜீவன்” என்ற சத்தியத்தை அறியாமல் அந்தகாரத்திலும், மரண இருளின் பள்ளத்தாக்குகளில் வாழ்வோரையும், எவ்வித மருத்துவ ரேவையும் கிடைக்காமல் மரணத்தின் விளிம்பில் வசிப்போரையும், விந்தை ஒளிக்குள் அழைத்திடும் இந்த உன்னதமான பணிகளை உங்கள் ஜெப வேளைகளில் நினைவு கூருங்கள். பணியில் ஈடுபட்டு பிரயாசப்படும் எங்களையும், எங்கள் குடும்பத்தினரையும் உங்கள் ஜெபங்களில் தாங்குவீர்களாயின் அது நாங்கள் சோர்வின்றி பயணிக்க ஏதுவுண்டாக்கும். தொடர்ந்து இந்த பணிகளின் மூலம் நாங்கள் பெற்றுக் கொள்ளும் அனைத்து தேவ தொடுதல்களையும் தேவனை மகிமைப்படுத்துவதற்காக தொடர்ந்து உங்களுக்கு தெரியப்படுத்துவோம். நம் தேவனுடைய மகிமை உங்கள் மீது பிரகாசிக்கட்டும். அது மற்றவர்களையும் அவருக்குள் கொண்டுவர உதவட்டும்.

இவண்

தேவனுடைய சுவடுகளை

தொடரும் சகோதரன்



டாக்டர் .C. அசோக்குமார்